இலங்கை வித்தியா போதினி

CEYLON JOURNAL OF EDUCATION

(Tamil Section.)

தொகுதி : **4.** | செப்டெம்பர் – **1946** | பகுதி : **8.**

ஆசிரியர்களைப் பயிற்றல்

(முற்றொடர்)

2. ஆசிரியரைச் சமூகத்திலொருவராகக் கருதி அளிக்கப்படும் கல்வியைப்பற்றி இனி ஆராய்வோம். ஆசிரியர்கள் சமூக விருப்பமற்றவராய்—இசைவிக்க முடியாதவராய்—துறவிகள்போல வாழுதல் இயலாது. சமூகத்தைப்பற்றி அவர்கள் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். சரித்திரம் இலக்கியம் ஆதியவற்றைப் பலகாலும் துருவி ஆராய்ந்து மனித சமூக விருத்தியினைப்பற்றி ஒரு அளவுக்கு விளங்கிக்கொள்ள வேண்டும். இதற்காக, தாய்நாட்டிலும் பிறவிடங்களிலுமுள்ள சனங்களின் சீவியத்தைப்பற்றிய பூமிசாத்திரச்சார்பு அறிவு அவசியம் வேண்டப்படுவதாகும். இச் சார்புடனொட்டி மனித சமூகத்தின் வளர்ச்சியினைப் பழைய போர்கள் யுத்தங்களென்று கவனித்துப் படியாமல் நாகரிகத்தோடொட்டிப் படிக்கவேண்டும். சீனர்கள், இந்தியர்கள், இஸ்லாமியர், எபிரேயர், கிரேக்கர், உரோமர், ஐரோப்பியர் ஆகியோரின் நாகரிகங்களுக்கு எழுவாயாயமைந்த சக்திகளையும் தெரிந்துகொள்ளவேண்டும். இவைகளைவிட உலகத்தின் பலபாகங்களிலுமுள்ள பாரிய இலக்கியங்களை மொழிபெயர்பிலாவது வாசித்தறிய வேண்டும். இவ்வகையாற்றான் உண்மை, நன்மை, அழகுக் காட்சிகளையெல்லாம் அவர்கள் காணமுடியும்.

மேலும், ஆசிரியர்கள் சமூக நலத்துக்காய ஸ்தாபனங்களைப்பற்றி அறிந்துகொண்டு சமூகத்துக்கு வேண்டிய தொண்டுகளையெல்லாம்

புரியப் பயின்றுகொள்ள வேண்டும். சமூகசேவை ஸ்தாபனங்கள், குழந்தைகளின் விளையாட்டு நிலையங்கள், கூட்டுறவு இயக்கங்கள் போன்றவைகளில் ஆசிரியர்கள் பங்குபற்றி எவ்வளவோ உதவிகள் செய்யலாம். இவைகளைப்பற்றி விளங்கிக்கொள்ளுவது சமூகத்தில் ஒருவராகத் தம்மைத் தயார்செய்வதில் ஒரு பெரும் பகுதியாய் அமையும்.

3. ஆசிரியருக்கு விசேஷ துறைகளில் அளிக்கப்படும் கல்வியைப்பற்றி இப்போது ஆராய்வோம். ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைகளில் ஏதாவது செய்யக் கூடுமாயினும் அது மிகவும் சிறிய அளவுக்குத்தான் இருக்கும். ஆசிரியத் தொழிலுக்கெனப் பயில்பவர்கள் தாங்கள் எவ்வெத் துறைகளைப் பின்பு படிப்பிக்கத் தீர்மானித்திருக்கிறார்களென நிர்ணயித்துக் கொள்ளுதல் வேண்டும். சிலர் பாலர் தோட்ட வகுப்பு ஆசிரியர்களாக இருக்க விரும்பலாம். வேறு சிலர் ஆரம்ப அல்லது சிரேஷ்ட வகுப்பு ஆசிரியர்களாக இருக்க விரும்பலாம். மேற் கல்வி பெறும் வகுப்புகளே தமது துறைகளாகவும் சிலர் கருதலாம்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களாக வர விரும்புபவர்கள் தாம் விசேஷ பாண்டித்தியம் பெறவேண்டிய பாடங்கள் இவையிவையெனத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் ஏனெனில், சிலவேளைகளில் ஆசிரியர்கள் தாம் பாண்டித்தியம் பெற்ற பாடங்களைவிட வேறு பாடங்களையும் பாடசாலைகளிற் படிப்பிக்கும்படி நேரிடுகின்றதன்றோ! ஆசிரியர்கள் சிலர் கலைகளிற் பாண்டித்தியம் பெறுகின்றனர்; சிலர் விஞ்ஞானத்துறை பாண்டித்தியம் பெறுகின்றனர். ஆசிரியராக வர விரும்புபவர்கள் முதலில் தாம் நன்கு பயின்று படிப்பிக்க விரும்பும் பாடங்கள் இவையிவையென்று தீர்மானித்துக்கொள்ளவேண்டும். தாம் படிப்பிக்க விரும்பும் பாடங்களிலே தாடணம் பண்ணிக்கொண்டவர்கள் தமது படிப்பித்தலை நாளாந்தப் பயிற்சியினால் மிகச் சீர்பட்டதாக அமைத்துக்கொள்ளலாம். மனம் வெளிறாகவும் பற்றிக் கொள்ளுந் திறன் நிலையற்றதாயுமிருப்பின் உத்தியோகத்துக்குரிய பயிற்சி பயன் தருவதாகாது; கல்லின்மேல் விழுந்தழிந்தொழியும் விதைகள் போலவே பயிற்சியும் உதவாது போகும்.

4. ஆசிரியருக்கு உத்தியோக சம்பந்தமாக அளிக்கப்படும் கல்வி பயிற்சி பெறுவோரின் பொது அமைதிகளைப்பற்றி இதுவரையும் ஆராய்ந்தோம். தகுதிவாய்ந்த ஆசிரியராக வருவதற்குப் பயிற்சி பெறுவோர் தமது வேலைகளைப்பற்றியும் கைத்திறன் ஆதியவற்றைப் பற்றியும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

முதலாவதாக, மாணுக்கர்களையும் அவர்களது உடைமைகள் வன்மைகள் ஆதியவற்றையும் அறிந்துகொள்ளுவதோடு அமையாது அவர்களது தற்குறைவுகளையும் நன்கு கவனித்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், மாணவர்களைத் தனிப்பட்டவர்களாகவும் சமூகத்தின் பகுதியினராகவும் ஆக்கும் வன்மை ஆசிரியரிலேயே தங்கியுள்ள தாகும். மாணவர் இயற்கையினையும் அவர்களது பலவாய தேவை களையும் கண்டறிதற்கு அகநூலறிவு மிக அவசியமாகும். அகநூலறி வின் அவசியத்தை மிகுதிப்படுத்திக் கூற முடியுமெனினும் பாலர் அகநூலிற் குழந்தைகளின் அக விருத்தி, அவற்றிற்கிடையேயுள்ள தனி வேறுபாடுகள் குணசீல வர்ளச்சி ஆகிய இவற்றைப்பற்றியாவது நன்கு அறிந்துகொள்ள வேண்டும். "சிக்கலான குழந்தை" எனப் படுவது ஏன் எனவும் விளங்கிக்கொள்ளவேண்டும். ஒருகால் குழந்தை களின் அக இயற்கையையும் மனவெழுச்சிகளையும் பற்றி ஆசிரியர் அறிந்துகொண்டாரானல் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல் லாம் நாடி அறிந்து கூடிய அளவுக்குச் செய்தல் கூடும். பழைய முறைப் பாடசாலைகளிலுள்ள பெரிய குறை படிப்பிக்கப்படும் மாண வர்களைப்பற்றி ஆசிரியர் சிறிதும் 'அறிந்துகொள்ளாமலிருப்பதே யாகும். இது காலவரையும் பாடங்களை நோக்கியே எல்லோரும் படிப்பித்துக்கொண்டு வந்தார்கள்; குழந்தைகளின் அக வளர்ச்சி விருத்தி முதலியவற்றைப்பற்றிக் கவனஞ் செலுத்தப்பட்டதில்லை.

அடுத்தபடியாக, பாடசாலை எனப்படும் ஸ்தாபனத்தின் இயற்கை யியல்புகளையும் தொழில்முறைகளையும்பற்றி ஆசிரியர் அறிந்துகொள்ள வேண்டுவது அவசியம். ஆதலால், ஆசிரியர்கள் பாடசாலைகளின் அமைப்பு முறையினையும் பாடசாலைத் தொழின் முறைகள் பிரிவுகள் யாவற்றையும் முற்றிலும் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் பாடசாலையை ஒரு சாகியமென மதித்து நடக்க வேண்டும். அல்லாமலும், அவர்கள் தங்களது கடமைகள், கடப்

பாடுகள், உரிமைகள் யாவற்றையும் நன்கு தெரிந்து தம்பாலுள்ள சாகியத்துக்கு வேண்டிய வேண்டியவற்றைச் செய்துகொள்ளுதல் முக்கியமாகும்.

இச் சாகியத்தின் உணர்ச்சி ஆதியவற்றைக் கிளர்த்திவிடுவதற்கான சக்தியினை முற்றிலும் விளங்கிக்கொள்வதற்குக் கல்வி சம்பந்தமான சிந்தனைகளும் நோக்கங்களும் விருத்தியடையுமாற்றினை நன்கு கண்டறிந்து பயின்றுகொள்ள வேண்டும். வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நாட்டுகளின் கல்வி விற்பன்னர்கள் செய்த ஆராய்ச்சிகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் இயல்பு ஆசிரியர்களிடத்தே அமைய வேண்டும். கல்வி யென்பது யாதெனவும் கல்வி சம்பந்தமான நோக்கங்கள் எங்ஙனம் உருவாகி விருத்தியடைகின்றனவெனவும் பரந்த நோக்குடன் தெளிவாக அறிந்துகொள்ளாத ஆசிரியர்கள் கல்வித் தத்துவத்தையும் நோக்கங்களையும் அறியாதவராக, அவர்களுடைய படிப்பித்தலும் குன்றிப் பயனற்றதாய்விடும். ஆசிரியர்கள் இலக்குகளைக் கைவிட்டு நடக்குமுறைகளையே நோக்குபவராவர்; சிறந்த நோக்கங்களை விட்டுவிட்டுச் சோதனைகளையே முக்கியமானவைகளாகக் கொள்ளுவர். அப்பொழுது ஆசிரியர்கள் எந்திர ரீதியில் முயலத் தொடங்குகின்றனர். எனவே, அவர்களது படிப்பித்தல் மகிழ்வு தராததாய்க் கிரமாப்பியாசம் எனும்படி வந்துவிடுகின்றது. மன வெறுப்பும் களைப்பும் மேலிட்டுவிடுகின்றன; ஆசிரியருக்குப் படிப்பித்தலில் வெறுப்பு உண்டாகிவிடுகிறது. இலக்கும் நோக்கமும் எம்மைக் கிளர்த்தி விடாவிட்டால் படிப்பில் களைப்பும் வெறுப்பும் உண்டாகிவிடும்.

படிப்பித்தற் பயிற்சி.

ஒவ்வொரு பயிற்சி நிலையத்துக்குப் பக்கத்திலும் ஒவ்வொரு ஆசிரியர் 'பரிசோதனை நிலையம்' இருக்கவேண்டும்: அதாவது அப் பரிசோதனை நிலையமாகிய பாடசாலையிலே குழந்தைகளைப்பற்றிய ஆராய்ச்சி செய்தல் வேண்டும்; பரிசோதனைகளை நடத்தவேண்டும்; பயிற்சியினாலே ஆசிரியர்கள் தமக்குக் கைத்திறனை மிகச் செய்துகொள்ளவேண்டும். ஒருவரது மேற்பார்வையிற படிப்பிப்பது அவசியமாக வேண்டப்படுவதொன்று: பயிலும் ஆசிரியர்கள் அங்ஙனம் செய்வதனாலே வகுப்பினை நடாத்துவதிலே திறன் பெற்றுக்கொள்வார்கள்; மாணவர்கள் படிக்கும்போது உதவிகள் புரிந்து வழிகாட்டும்

முறையினையும் பயின்றுகொள்வார்கள். இந்தப் 'பயிற்சி' வகுப்புடன் மாத்திரம் நின்றுவிடக்கூடாது. ஏனெனில், ஆசிரியர்களது வேலை இதனைவிட எவ்வளவோ இருக்கின்றது: எல்லா வேலைகளும் வகுப்புடன் நின்றுவிடவில்லை. படிப்பித்தற் பயிற்சியில் பாடசாலை வகுப்புத் திட்டத்துள் அமையாத பிற தொழில்களும் சேர்க்கப்படுதல் வேண்டும். பயிற்சிபெறும் ஆசிரியர்கள் விடுதிச் சாலைகள் அமைத்து நடத்துதல், விளையாட்டுகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தமைத்தல், பிற இடங்களைத் தரிசிக்கப் போவதற்கு ஒழுங்குகள் செய்தல், குழந்தைகளுக்காகச் சங்கங்கள் தொடங்கி நடத்துதல் ஆதியவற்றிலும் பயிற்சி பெறுதல் வேண்டும். சனநெருக்கமுள்ள நகரமத்தியில் குழந்தைகளுக்கு விளையாட்டு மைதானங்கள் அமைத்தல் நல்லது. ஆசிரியர்களிலொருவர் இவற்றை அமைக்கும் முறையினையும் நடாத்துமுறையினையும் அறிந்திருத்தல் வேண்டும். இவைகளையெல்லாம் நடத்தி முடிப்பதற்கு ஒரு 'சாதன' பாடசாலையினை மாதிரிப் பாடசாலையாக அமைத்துக்கொள்வது அவசியமாகும். இப்படியான ஒரு பாடசாலையில், ஒரு பாடசாலை எங்ஙனம் நடத்தப்படவேண்டுமெனப் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் கண்டுகொள்வார்கள். பாடசாலை அமைப்பு முறை, படிப்பித்தற் றந்திரம், குழந்தைகளைப் பாடசாலையிலும் புறத்தும் வழிகாட்டி நடத்தல், பாடசாலையினைச் சாகியம்போல மதித்து வாழ்க்கை நடத்தல் இவற்றைப்பற்றிப் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் நேரே கண்டறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கவேண்டும்.

கடைசியாக, ஆசிரியர்களதும் படிப்பித்தலினதும் தன்மையினையும் நிலைமையினையும் மாற்ற வேண்டுமேயானல் ஆசிரிகளிடையேயுள்ள 'மனோதைரியம்' மாறவேண்டும். மனோதைரியமாவது எவ்விதக் கஷ்டங்களேற் படினும் தனியாகவோ கூட்டமாகவோ சேர்ந்து நின்று தம் தொழிலைச் செய்ய உதவுவதாம். தானும் தனது தொழிலும் சமூகத்திற்குப் பெரிதும் வேண்டப்படுவது என்று தலை நிமிர்த்தி நெஞ்சிற் றட்டிக் கூறுவதற்குப் பெலம் அளிக்கின்றது அதுதான் இதற்குப் பெரிதும் உதவியாயிருப்பது அவர்களது சம்பளம். அச்சம்பளத்தைக்கொண்டு நல்ல வாழ்க்கையும், மன ஆறுதலும், கல்வியும் பிறவும் பெற்று மற்ற மக்களுடன் கூடித் தமது ஸ்திதிக்குப் பங்கம் வராமல் நடமாடத்தக்கதாயிருக்கவேண்டும்.

—எஸ். எவ். த சில்வா.

கல்வியும் தமிழகமும்

(முற்றொடர்)

'தலைகீழ்ப் பாடம்' எனுஞ் சொற்றொடர் படித்த செய்யுள்களை எல்லாம் தட்டுத்தடையின்றிச் சொல்லும் ஆற்றலையே குறிப்பிடுகிறது. நெட்டுருச் செய்த செய்யுள்களை மீட்டும் மீட்டும் ஞாபகப்படுத்துவதைப் 'பாடம் போற்றல்' என்பதாற் குறித்தனர். படித்த பாடங்களிலே மறதியால் சில இடங்களில் தட்டுப்பட்டால் அவற்றை ஏடுகளிற் பார்த்துப் பாடமாக்கிக்கொள்வதற்காகத் தாம் எழுதிப்படித்த ஏடுகளைக் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்து வந்தார்கள். 'பாடம்' ஏறினும் ஏடது கைவிடேல்' என்பது எப்பொழுதும் ஏட்டைத் தம்முடனேயே வைத்திருந்தார்கள் என்பதை நன்கு காட்டுகிறது.

அந்தகக் கவியாகிய வீரராகவ முதலியார் ஏடுகளை எழுதிப் படியாமலே பல நூல்களைப் படித்துப் பாடமாக்கி வைத்திருந்தார் என்பது அவருடைய வரலாற்றுக் குறிப்புக்களாற் புலனாகிறது.

"ஏடாயிரங்கோடி எழுதாது தன்மனத் தெழுதிப்
படித்த விரகன்" என முதலியாரும்,
"கன்னன் சயந்தன் கவிவீரராகவன் கச்சியிலே
தன் நெஞ்சம் ஏடெனக் கற்றான் கனமுத் தமிழையுமே"

எனப் பரராச சிங்கனுங் கூறியவற்றைக் காண்க. ஒரு வெண்பாவை இரு முறை படித்தவுடன் மனனஞ் செய்யும் ஆற்றல யாவருக்கும் இருக்கவேண்டும் என்பதை ஔவையார் தமது செய்யுள் ஒன்றிலே புலப்படுத்தியுளர்.

"வெண்பாவிரு பாலிற்கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றோ மற்றெற்று மற்றெற்று" எனபதச் செய்யுள்—

இவற்றால் முற்காலத்தில் மனனப் பயிற்சியை எவ்வளவு அதிகமாக விருத்தி செய்தார்கள் என்பது நன்கு விளங்குகிறது. இறையனார் அகபொருளுரை வந்த வரலாற்றிலே அவ் வுரையைத் தலைமுறை

தலைமுறையாக ஒப்படைத்தவர்களுடைய பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன[68] தமிழைப் போன்ற பழமையுடைய பிற மொழிகளிலும் வழிமுறையாகப் பாடமாக்கியே நூல்களைப் போற்றி வந்திருக்கின்றார்கள். வடமொழியிலுள்ள வேதங்களைப் பலகாலமாக ஏட்டில் எழுதாமல் நெட்டுருச் செய்து பாதுகாத்து வந்தனர் என்பதை யாவரும் அறிவர். அவற்றை இலகுவில் நெட்டுருச் செய்வதற்குக்கூட 'கனம்', 'ஜடை' முதலிய பல முறைகளை மேற்கொண்டனர். இந்தியாவில் மாத்திரமன்றி மேலைத் தேசங்களிலும் நூல்கள் முழுவதையும் நெட்டுருச் செய்து போற்றுதல் மரபாயிருந்தது. கிரேக்க மொழியில் எழுதப்பட்ட சிறநத இலக்கியங்களாகிய 'இலியட்', 'ஒடிசி' எனும் நூல்களைப் பலகாலமாகப் பாடமாக்கி வந்தார்கள் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

10. ஆசிரியவழிபாடும் ஒழுங்குமுறையும்.

ஐங்குரவர்களுள் ஆசிரியர் ஒருவராக விளங்கினார்.[69] கணக்காயர்கள் தம் வாழ்நாள் முழுதும் ஊரவர்களின் நன்மைக்காகவே உழைத்து வந்தார்களாகையால் ஒவ்வொரு ஊரிலும் அவர்களுக்குத் தனி மதிப்பு இருந்தது. 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என மாணவர்கள் மாத்திரமன்றி ஊரவர்களும் போற்றினர். ஆசிரியர்கள் சோதிடர்களாகவும், வைத்தியர்களாகவும், ஊர்த்தலைவர்களாகவுங்கூட ஊரவர்களுக்கு உறுதுணை புரிந்தனர். மாணவர்கள் தமிழ்ச் சுவடிகளை எழுதும்பொழுதும் படிக்கும்பொழுதும் 'குரு வாழ்க குருவே துணை' என்று தொடங்குவது மரபாகி நிலைபெற்று

---

68. "மதுரைக் கணக்காயனார் மகனார் தம்மகனார் கீரங் கொற்றனார்க்குரைத்தார்; அவர் தேனூர் கிழாஅர்க்குரைத்தார்; அவர் பாடியங் கொற்றனார்க் குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ் சுவனார்க் குரைத்தார்; அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார்க் குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமரனார்க் குரைத்தார்; அவர் திருக்குன்றத் தாசியர்க் குரைத்தார்; அவர் மாதவளனார் இளநாகனார்க் குரைத்தார்; அவர் முசிறியாசிரிய நீலகண்டனார்க் குரைத்தார்; இங்ஙனம் வருகின்றது உரை—இ. அ. பொ. பக். 11.

69. ஆசாரக் கோவை, செ. ள். 3.

விளங்கிற்று. காலையிற் படிப்புத் தொடங்கும்பொழுது நாடோறும் மாணவர்கள் பல துதிகளைக் கூறிக் கடவுளையும் ஆசிரியரையும் வணங்குவார்கள். ஆசிரியர்களும் தம் தொழிலின் விழுப்பத்தை நன்கு உணர்ந்து மாணவர்களைச் சான்றோர்களாக்குவதற்குத் தம்மால் இயன்றனவற்றைச் செய்தனர். அன்பினாலே தம் மாணவர்களை அடக்கினார்கள். தமது முன்மாதிரியான தூய ஒழுக்கத்தினால் மாணவர்களை வசப்படுத்தி நன்னெறியிற் செலுத்தினார்கள். மாணவர்கள் ஆசிரியர்களிடத்தில் பயபக்தியுடையவர்களாய் மரியாதையாக நடந்துவந்தார்கள். ஆசிரியர்களுடைய கல்வி, ஒழுக்கம், கடவுட் பக்தி, பெருமை, அவர்களுக்குப் பெற்றோர் அளித்த மதிப்பு முதலியன மாணவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்து பண்படுத்தின. பள்ளிக்கூடங்களில் மாத்திரமன்றி வெளியிடங்களிலும் அவர்கள் ஆசிரியர்களுக்கு அமைந்து ஒழுகினார்கள். மாணவர்களுடைய நன்னடத்தைக்கு ஆசிரியர்தான் பொறுப்பானவர் என்பது பெற்றோர், மாணவர், ஆசிரியர் ஆகிய முத்திறத்தினருக்கும் உடன்பாடான கொள்கையாயிருக்கிறது. வீட்டில் பெற்றோருக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகளைக்கூட ஆசிரியர்கள் அடக்கி நல்வழியிற் செலுத்திப் பெற்றோருக்கும் உதவி செய்தார்கள். 'கொண்ட கோலத்தை மாற்றக் குருவாலும் முடியாது' எனும் பழமொழியிலுள்ள உண்மை ஆசிரியர்கள் எவ்வளவு தூரம் மாணவர்களின் ஒழுக்கத்துக்கு—கெட்ட பழக்க வழக்கங்களை மாற்றுவதற்குப்—பொறுப்பாய் இருந்தார்கள் என்பதை நன்கு காட்டுகிறது.

11. தண்டனை.

கற்றல் கற்பித்தல் முறைகளைப்பற்றிக் கூறும் பழந்தமிழ் நூல்களிலே மாணவர்களுக்குச் செய்யத்தக்க தண்டனைகளைப்பற்றி ஒன்றுங் கூறப்படவில்லை.70 பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் தண்டனைகள் இல்லை என்றே கூறலாம். இளமைப் பருவந்தொட்டே நன் முறையில் கற்பித்துப் பயிற்றப்படும் மாணவர்களுக்குத் தண்டனை தேவைப்படாதன்றோ! அன்பினாலேயே முற்கால ஆசிரியர்கள் மாணவர்களை அடக்கிவந்தார்கள். அன்பினால் மறத்தையும் அடக்கி

---

70. வடமொழியிலே கௌதமர், மனு, ஆபஸ்தம்ப முதலியோருடைய நூல்களில் தண்டனைகளைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

ஆளலாம் எனுங் கொள்கையையுடைய தமிழறிஞர்கள்71 அன்பிஞலேயே தண்டித்தார்கள். ஆனல் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் ஆசிரியர்களுக்குக் கற்பிப்பது மாத்திரமன்றித் தண்டிப்பதும் ஒரு தொழிலாக நிலவத் தொடங்கிற்று.

"கல்வி எனும் பயிருக்கு கண்ணீர் எனும் மழை வேண்டும்,"
"அடியாத பிள்ளை படியாது,"
"அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவார்,"
"பிரம்படிபடாத பிள்ளை பாழ்,"
"சட்டப்பி பொல்லாதான் சட்டப் பிரம்பாலே
தழும்பு பட அடித்திடுவான்".

எனும் பழமொழிகள் கூடத் தமிழ் நாட்டில் நிலைபெற்றன. இவ்வாறு தண்டனைகள் மலிந்து ஆசிரியர்கள் அச்சத்திற்கு இருப்பிடமாக மாறிய காரணம் பேரறிவும் நற்குண நற்செயல்களும் இல்லாதவர்கள் ஆசிரியர்களாகிக் கற்பிக்கத் தொடங்கினமையே எனலாம். அன்புநெறி குடிபோய் மறநெறி நிலைபெற்றதாற் பலவித தண்டனைகள் தோன்றின. அண்ணுந்தாள் பூட்டுதல், கோதண்டமிடுதல், கட்டைகள் மாட்டுதல், விலங்கிடுதல், முதலியன சமீப காலம்வரையும் நிலைபெற்ற சில தண்டனைகளாகும். பிரம்பால் அல்லது தடியால் அடித்துத் தண்டிப்பது வழக்கமாய் வந்துவிட்டது. பிரம்பு ஆசிரியர்களோடு தோழமை பூண்டு இணைபிரியாது அவர்களுடன் எப்பொழுதும் இருந்தது. சில ஆசிரியர்கள் 'கோலாடக் குரங்காடும்' என்றுகூடச் சொல்லித் தம் வீரத்தை வெளிப்படுத்தினுர்கள். இவ்வாறு கூறுவதால், தம்மைத் தாமே பழித்துக்கொண்டார்கள் என்பதைக்கூட அவர்கள் அறியமுடியாது மயங்கி இருந்தார்கள்போலும் !

பாடத்தை நன்கு ஒப்படையாதவர்கள், நன்கு ஒப்படைத்தவர்களைச் சுமக்கும்படி ஏவப்பட்டார்கள். இடைக்காலத்தில் சுமக்குந் தண்டனை இருந்தது என்பது.

---

71. அறத்திற்கே அன்பு சார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை—திருக்குறள் 76.

"மற்பொலி திண்டோட் தென்னன்
வன்பிழை பொறுத்தி வென்ற
கற்புவீ றுடையாய் தோற்றுள்
கழுத்திடை வளைத்தேறு என்ன
விற்பொலி நுதலாள் கேட்டு
மெய்த்தவன் அருளை வாழ்த்திப்
பொற்புறு கழுத்தினில் ஏறி
இருந்தனள் பொலிவுண்டாக," எனும்

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணச் செய்யுளாற் புலனுகிறது. இசைவாதிற் றோற்ற பெண் ஒருத்தி தன்னை வென்றவளைச் சுமந்தாள் எனும் செய்தியை இது கூறுகிறது. நிற்க,

ஆரம்பத்தில் பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங்காகச் செல்லாது ஒழித்துத் திரிந்த பிள்ளைகளையே தண்டிக்கத் தொடங்கியிருக்கலாம். கல்லா இளைஞர் வேப்பமர நிழலிலிருந்து வட்டாடி விளையாடுவார்களென்று நற்றிணை எனும் சங்க நூலால் அறியப்படுகிறது.

"பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை அன்ன வட்டரங்கு இழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்"73 எனும் அடிகளைக்

காண்க! மேலும் 'பள்ளிக்கூடத்திற்குப் போய்ப்படி என்று தந்தையர்கள் கூறினும், நெருக்கினுலுங்கூட அவ்வாறு செய்யாத துடுக்குடைய பிள்ளைகளும் கற்கவேண்டிய பருவத்திலே கல்லாது துள்ளித் திரிந்த பிள்ளைகளும் முற்காலத்தில் இருந்தார்கள்.

"கல்லென்று தந்தை கழற அதனையோர்
சொல்லென்று கொள்ளாதவன்" என்பது நாலடியார்.74
"துள்ளித்திரிகின்ற காலத்திலே என்துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலன்..." என்பது ஒரு தனிப்பாடல்.

இப்படிப்பட்டவர்களை அடக்கிப் படிக்க வைப்பதற்கு உதவி செய்த தண்டனையை உரிய நேரத்தில் பள்ளிக்கு வாராத பிள்ளைகளை

73 நற்றிணை 3. 74 நாலடியார் 353.

யும் துஷ்டப்பிள்ளைகளையும் பயமுறுத்துவதற்கு உபயோகித்தனர். பின்னர், பாடங்களை முறையாக ஒப்புவிக்காத பிள்ளைகளையும் மந்தர் களையுங்கூட ஒரு நெறிமுறையின்றித் தண்டிப்பது வழக்காகி ஆசிரியர் களுக்கு இழுக்கையும் உண்டாக்கிற்று.

தமிழ்நாட்டில் தண்டனைகள் இடைக்காலத்திலே தோன்றிப் பிற்காலத்திலே பெருகின. வட இந்தியாவில் முற்காலத்திலேயே தோன்றி இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் பல்கின. பிழை செய்யும் மாணவர்களுக்கு முதுகில் கயிற்றால் அல்லது பிரம்பால் அடிக்கலாம் என மனுதர்ம சாத்திரத்திற் கூறப்பட்டுளது.75 பயமுறுத்தல், பட்டினிபோடல், குளிர்நீரில் ஆடச்செய்தல், வகுப் புக்கு வெளியே அனுப்புதல் முதலிய தண்டனைகளைப்பற்றி 'ஆபஸ் தம்ப' கூறுகிறார்.76 பிற்காலத்தில், நேராக நின்று வளைந்து நிலத்தை மூக்கினாலே தொடுதல், தலைகீழாக மரக் கொம்பில் தொங்கல், மூக்கால் அடையாளமிட்டு முழமிடல் முதலிய பல கொடிய தண்டனைகள் தோன்றின.77

இந்தியாவில் மாத்திரமன்றி ஐரோப்பிய தேசங்களிலும் முற் காலத்திலும் இடைக்காலத்திலும் கொடிய தண்டனைகள் பல செய்யப் பட்டன. கிரேக்க நாட்டிலுள்ள ஸ்பாட்டா நகரத்தில் மாணவர் களுக்குச் சவுக்கடிகூடக் கொடுக்கப்பட்டது. மாணவர்களுக்கு எவ்வித தண்டனையும் கொடுக்கப்படாதெனும் கொள்கை தோன்றி எங்கும் பரந்து வளர வித்திட்டவர் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த றூசோ எனும் பிரான்சுதேச அறிஞரே யாவர். மொன்ரி சோறி அம்மையார் தண்டனைகள் மாத்திரமன்றிப் பரிசில்கள் அளித் தலும் கூடாது என்று கூறுகிறார். தமிழகத்திலும் மாணவர்களுக்கு எவ்வகையான பரிசிலும் அளிக்கப்படவில்லை. மாணவர்களே ஆசிரி யர்களுக்குத் தத்தம்மால் இயன்ற பலவித காணிக்கைகளைக் கொடுத் தார்கள் என்பது நன்கு அறியப்படுகிறது.

---

75. Manu VIII 299, 300. 76. Apastamba 1,2.
77. Intro. to Adam's Reports pp 10.

12. விடுதலை நாட்கள்.

விடுமுறைகளைப்பற்றித் தமிழ் நூல்கள் வாயிலாக ஒன்றும் அறிய முடியாதிருக்கிறது. ஆனால் அண்மைக் காலம் வரையும் இருந்து மறைந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்தவர்கள் சிலருடைய கூற்றுக்களால் பிற்காலத்தில் பௌர்ணமி, அமாவாசை, அஷ்டமி, பிரதமை முதலிய திதிகளில் படிப்பு நடக்கவில்லை எபன்து நன்கு தெரிகிறது.

"அட்டமியில் ஓதினல் ஆகானுக்காகாது
சிட்டருக்குப் பன்னன்கு தீதாகும்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை" இத்தனிச் செய்யுள் ஓதத்தகாத நாட்களிவை எனக் கூறுகிறது.

மேலும், விசேடமான விழாக்களைக் கொண்டாடும் நாட்களிலும், கோவில்களிலே திருவிழாக்கள் நடக்கும் காலங்களிலும் விடுதலை உண்டு. இப்படிப்பட்ட நாட்களிலே மாணவர் யாவருஞ் சேர்ந்து விளையாடி இன்பமாகக் காலத்தைப் போக்குவர். நவராத்திரி காலத்தில் நாடோறும் கோலாட்டம் முதலியன நிகழும்; மாணவர் களும் ஆசிரியர்களும் சேர்ந்து ஆடிப்பாடிக்கொண்டு பெற்றோர் வீடுகளைத் தரிசிப்பார்கள்.

(தொடரும்)

கா. போ. இரத்தினம்.